விலை ரூபா 2-00 ★ 8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 வைகாசி 13 றம்ழான் 5 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (26—5—85) இதழ் 105

## 4 விடுதலை இயக்கங்களின் லண்டன் கூட்டம்

(லண்டனிலிருந்து குஹநாதன்)

தமிழீழ விடுதலைப்புலிகள் (புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.), ஈழப் புரட்சிகர அமைப்பு (ஈரோஸ்) ஆகிய நான்கு விடுதலை இயக்கங்களின் இணைப்புக் கூட்டம் ஒன்று இன்று லண்டனில் நடைபெறுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# எம். பிக்களுக்கு அதிகாரம், இராணுவச் சட்டம்

# அரசியல் அமைப்புக்கு முரண்

## பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்கிறார் 'கொல்வின்'

(பி. ராஜரட்ணம்)

''இராணுவச் சட்டத்தை பிரகடனம் செய்வது எம். பி. களுக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்குவது போன்ற இலங்கை அரசின் யோசனைகள் அரசியல் அமைப்புச்சட்டத்துக்கு முரணானது'' என்று லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று 'ஈழநாடு'க்கு இதனைத் தெரிவித்தார்.

''அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தின்படி 'அவசரகால நிலை' மாத்திரம் பிரகடனம் செய்யமுடியும் ஆனால் இராணுவச் சட்டத்தை இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்அமுல்படுத்தமுடியாது அதே போன்று எம்.பிக்களுக்கு நிறைவேற்று அதிகாரங்களும் வழங்க முடியாது'' என்றார்.

''இராணுவச் சட்டத்தை அமுல் படுத்துவதினால் ஏற்படும் அனர்த்தங்களை நாங்கள் யாரும் இதுவரை எதிர்கொண்டதில்லை. ஆனால் இராணுவச் சட்டத்தை அமுல் படுத்துவதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம் 1915இல் இத்தகைய இராணுவச் சட்டம் அமுல் படுத்தப்பட்டபோது ஏற்பட்ட அனர்த்தங்கள் பயங்கரமானவையாக இருந்தன.

எம். பி. க்களுக்கு தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம்பொதுவான அதிகாரங்களேஉண்டு. எனவே அவர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கமுடியாது.

இவற்றை அரசு அமுல் படுத்துவதாயின் அரசியல் அமைப்புச்சட்டம் திருத்தப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் மேற்படி யோசனைகள் குறித்து தமது கட்சி விரைவில் கூடி முடிவெடுக்கும் என்றும் அவர் சொன்னார்.

## கொழும்பில் நேற்று அதிகாலை முதல் தமிழர் வீடுகள் சோதனை!

[கொழும்பு]

கொழும்பில் நேற்று அதிகாலை முதல் பல தமிழர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன.

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, மடடக்குளி வெள்ளவத்தை. கிரான்ட்பாஸ் கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களிலும் வேறு சில பகுதிகளிலும் அதிகாலை மூன்றரை மணி முதல் இச்சோதனை இடம்பெற்றது.

[8ம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் கடும் சோதனை

(மன்னார்)

மன்னாரிலுள்ள சில கிராமங்களில் கடும் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்காலை, அடம்பன். உயிலங்குளம் ஆகிய பகுதிகள் சோதனை செய்யப்பட்டதாகவும், அப்பகுதிகளில் உள்ள சிலர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (மா)

## பிரிட்டன் வரும் இலங்கைத் தமிழர்களை

# தாயகத்துக்கு திருப்பி அனுப்ப அரசு யோசனை

(லண்டன்)

கடந்த சில வாரங்களாக அதிகளவில் பிரிட்டன்வந்து சேர்ந்து கொண்டிருக்கும் இலங்கைத்தமிழர்கள்மீது பிரித்தானிய அரசாங்கம் கடும்போக்கினைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பிரிட்டன் வரும் இலங்கைத்தமிழர்கள் எண்ணிக்கை அளவுக்கதிகமாக மிதமிஞ்சிக்காணப் படுவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் ''இலங்கைத் தமிழர்கள் பிரிட்டன் வருவது குறித்து பிரித்தானிய அரசு அதன் குடியேற்றச் சட்டத்தில் சில விதிகளை அண்மையில் தளர்த்தியிருந்தது. ஆனால் இச்சலுகையைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையில் பிரிட்டனில் இலங்கைத் தமிழர் வருகை மிதமிஞ்சியுள்ளது.

''இலங்கையிலிருந்து மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் 50,80என்ற எண்ணிக்கைகளில் இலங்கைத் தமிழர் வருகை கூட்டம் கூட்டமாக அதிகரித்து வருகின்றது.

''இக் கூடுதல் வருகையைக் கட்டுப்படுத்தும் வகையில்

[8ம் பக்கம் பார்க்க]

## பன்குளத்தில் சம்பவம்

# ஒரே குடும்பத்தில் எட்டுப்பேர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள பன்குளம் என்ற இடத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் சீருடை அணிந்தவர்களினால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தாய், அவரது மகள், மருமகன், அவர்களின் இரு குழந்தைகள், வயோதிபமாது.

(8-ம் பக்கம் பார்க்க)

# தனியார் பஸ்ஸுக்கு என்ன நடந்தது?

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ் ஒன்று, யாழ்ப்பாணம் வந்து சேராததால், பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்ட பஸ் மாங்குளத்தில் தரித்து நிற்பதாகவும், அதில்இருந்த பிரயாணிகளின் நிலைபற்றி அறியமுடியாமலிருப்பதாகவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

(8ம் பக்கம் பார்க்க)

## எங்களை வாழவிடு

(மனிதாபிமான வேண்டுகோள்)

எங்கள் தொழிலதிபர்

திரு. ச. இராசரத்தினத்தை

கடத்திச் சென்று இன்றுடன் பன்னிரண்டு நாட்களாகி விட்டபடியால் நாம் இத்தனை நாட்களாக வேலையின்றி ஊதியமின்றி இருக்கிறோம்.

சம்பந்தப்பட்டவர்கள் திரு. ச. இராசரத்தினத்தை இருதினங்களுக்குள் விடுதலை செய்யாவிடில் நாம் அனைவரும் சாகும் வரை உண்ணாவிரதமிருப்போம்.

இராஜன் மின்தறி அரிசி ஆலை ஊழியர்கள்

புன்னாலைக்கட்டுவன்

26-5-85 3444

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சியாக்காய், பச்சை அரிசி, பயறு, வெந்தயம் ஆகிய நான்கு சேர்வையிலுள்ள சியாக்காய் பவுடர் விற்பனைக்குண்டு. பெக்கட் 5/50 தொடர்பு கொள்க. M.G.M and Stores, 777 காங்கேசன் துறை வீதி and 208 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. (2820)

மினி தியேட்டருக்கும், வீடியோ சென்ரருக்கும் தேவையான சகல சாதனங்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி இல: 22762. 3392

யூனிபோ உருக்கு அலுமாரி, மேசை, T.V. Stand, ஆபிஸ் கபேட் எமது யூனிபோ காட்சியறை 51, விக்டோரியா வீதி, யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. நிலைக்கண்ணாடியுடனும் அலுமாரிகள் தற்பொழுது விற்பனையாகின்றன. 3416

தட்டாதெரு சந்திக்கு 300 யார் தூரத்தில் சகல வசதியுடன் இரண்டு வீடுகளும், ரெயிலர் மொடல் சிங்கர் தையல் மெஷினும், ஒட்டுமடம் ஆலடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. நியூ குகானந்தா பவன் தேனீர் கடை, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 3409

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: சி துரைசிங்கம், அளவையூர் கபே, தெல்லிப்பளை. 3391

வீட்டுத் தளபாடங்கள், T.V. National 20'', Washing Machine. Table Fan, வீணை, Guitar, மின்சார உபகரணங்கள். சு. துரைசாமி, 71/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 3425

நவக்கிரி மார்க்கண்டு சாஸ்திரியார் வீட்டுக்கருகில் உள்ள 2½ பரப்புக் காணியும், வரளாயில 15 பரப்பு பனைக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எஸ். ஞானச்சந்திரன், ஆசிரியர், ஈவினை, புன்னாலைக்கட்டுவன். 3372

சண்டிலிப்பாயில் புதிய வீடு 3 படுக்கை அறைகள், சகல நவீன வசதிகளுடன் விற்பனைக்குண்டு தொடர்பு-எஸ்.யோகராசா, சட்டத்தரணி, தொட்டிலடி, சண்டிலிப்பாய். 3448

இரண்டு புதிய கேலஸி ரயர்கள் Suze 5 25X16 பாடசாலை கதிரை மேசை விற்பனைக்குண்டு தொடர்பு கே செல்வராசா 2 6, நாவலர் வீதி, இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம் (3443)

வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடி புதிய இல 19 ஓடை ஒழுங்கையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு-தொடர்பு சி சிவானந்தன், புதிய இல.19 ஓடை ஒழுங்கை. வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (3430)

## தவறிவிட்டது

காரைநகர், தங்கோடையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சண்முகராஜா, நடராசாதையல் நாயகி ஆகிய இருவரின் அடையாள அட்டைகளும் 24-5-85 அன்று நல்லூர்கந்தசாமிகோவிலில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் யாழ்ப்பாணம் நவீன சந்தை 17,18 ரஞ்சனாஸ் புடவை மாளிகையில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். (3450)

## விற்பனைக்கு

சங்கானை பட்டின சபை எல்லைக்குள் ஏழாம் வட்டாரத்தில் தொட்டிலடியில், வல்லை வீதியில் 4 4/3 பரப்பு காணி கிணற்றுப்பங்குடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்க திருமதி.யோ.சந்திரமலர், சங்கானை கிழக்கு, வல்லை வீதி தொட்டிலடி, சங்கானை. (3447)

அலுவலக மேசைகள் கதிரைகள், மின் விசிறிகள், தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு நன்கு காய்ந்த விறகு எம்மிடம் எப்போதும் கையிருப்பில் இருக்கும். நீங்கள் செலுத்தும் விலைக்கு முழுப் பெறுமதி வாய்ந்த விறகை வழங்குவதே எமது சேவையாகும். எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை. தம்பியையா விறகுகாலை 46, பிரப்பங்குளம் ஒழுங்கை[ரோட் அல்ல] வண்ணார்பண்ணை. (3436)

பிறவுண் ரோட், யாழ் இந்து மகளிர் கல்லூரி, தொழில் நுட்ப கல்லூரி, பல்கலைக்கழகம் மத்தியில் 1 1/2 பரப்புக் காணி வீடு கட்டுவதற்கு உகந்தது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் ராஜரத்தினம், 57 அம்பலவாணர் வீதி. அத்தியடி யாழ்ப்பாணம். (3369)

## மணப்பந்தல்

வட்டுக்கோட்டைத்தொகுதி இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த சைவபோசன ஆசிரியரின் மகளுக்கு 36 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை வீடு நகை ரொக்கம் சீதனமாக வழங்கப்படும். அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர், ஆசிரியர் விரும்பத்தக்கது. பெண் நட்சத்திரம்-சித்திரை சாதக பிரதியுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 3442 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (3442)

யாழ்ப்பாண இந்து வேளாள சமூகத்தைச் சேர்ந்த மேற்கு ஜேர்மனியில் (Factory) ஒன்றில் ஐந்துவருடங்களாக வேலைபார்க்கும் தீய பழக்கங்கள் அற்ற பன்னிரண்டில் செவ்வாய் தோஷமுள்ள 34 வயது மணமகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். மணமகள் அங்கு இருப்பவராகவோ அல்லது அங்குபோய் விவாகம் செய்யக் கூடியவராகவோ இருக்க வேண்டும். சீதன விபரம், குறிப்பு புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.3449 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (3449)

# றமழான் சிந்தனை

சாராயத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே. பகையையும், பொறாமையையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத்தடுத்துவிடவுமே நிச்சயமாக ஷைத்தான் விரும்புகிறான். [ஆகவே அவைகளிலிருந்து] நீங்கள் விலகிக் கொள்வீர்களா?

(—அல்குர் ஆன் 5.91)

நோன்பு துறக்கும் நேரம் [மஃரிப்] 6.21

நோன்பு துவக்கும் நேரம் [பைஹர் முடிவு] 4 18

—ஐனுப். அ.ல ஹமீஸ்
தாராபுரம்

## வாடகைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் ஆர்த்தியூவலர்ஸ் முன்பாக உள்ள மாடிக் கட்டிடம் மாத்திரம் வாடகைக்கு உண்டு. (விஸ்தீரணம் 2000 சதுரஅடி) நேசன் 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3426

யாழ்.இந்துக்கல்லூரிக்கருகாமையில் ஒரு புதிய வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்கு உண்டு தொடர்பு 10, கொழும்புத்துறை வீதி சுண்டிக்குளி. தொலைபேசி இல.24290. (3452)

# விளம்பரம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 2000 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனையாக உள்ளது, இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/-செலுத்தி பெற்ற விண்ணப்ப படிவத்தில் முத்திரை இடப்பட்ட உறையில் வைத்து 29-5-85 புதன் கிழமைக்கு முன்னதாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம், கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் வெற்றுச் சாக்குக்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பணவைப்பு ரூபா 500/-

**பொதுமுகாமையாளர்**
அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
3431

## விற்பனையாளர்கள் தேவை

எமது பத்திரிகைகளுக்கு முற்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கீழ்க்கண்ட இடங்களுக்குத் தேவை.

மந்திகை, மாங்குளம், அனலைதீவு,
நெடுந்தீவு, நயினாதீவு. அல்லைப்பிட்டி.

விண்ணப்பிக்கவும்:

பொது முகாமையாளர்,
ஈழநாடு லிமிட்,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

3412






வாழ்நாள் முழுவதும் பயன்படும் முதலீடு
நாளையல்ல இன்றே தீர்மானியுங்கள்

டைமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்
43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்

# 1ம் நினைவஞ்சலி

## கந்தசாமி இளங்கோ



ஆண்டவன் படைப்பு
21-5-67

ஆள்பவன் பறிப்பு
26-5-84

எங்கள் செல்வமே, நீ, உன் இலட்சியத்தை அமையாது உன்னைக்காலன் கவர்ந்து சென்றாலும் ஊதுபத்திபோல் மக்கள் மத்தியில் மணம்பரப்பி சாம்பராணாய் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் உன் பிரிவால் வாடும் அப்பா அம்மா சகோதரர்கள் சகோதரிகள் மைத்துனர் மைத்துனிகள் உறவினர்கள் நண்பர்கள்.

பொன்னந்தோட்டம்
துன்னாலை தெற்கு
கரவெட்டி.

(3236)

# முதலாண்டு நினைவஞ்சலி

## மரீனா பெனிற்ரு



அன்னையின் அணைப்பில்
1972–05–09

இறைவனின் அடியில்
1984–05–26

எங்கள் நெஞ்சமெல்லாம் அணையாச் சுடராய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் எங்கள் அன்புச் செல்வமே. எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென இறைவனடி சென்று ஆண்டொன்று சென்றாலும் உன் பசுமை நினைவுகள் எம்மை விட்டகலாது.

இவளின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 25-5-85 சில்லாலை புனித லூர்து மாதா ஆலயத்தில் மாலை 5 மணிக்கும் 26-5-85 புனித செபஸ்தியார் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்கு பற்றி அன்னாரது ஆத்தும இளைப்பாற்றிற்காக மன்றாடுமாறு வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, ஆச்சி சகோதரர்,
சகோதரிகள். அண்ணி, மருமகள்.

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறை 3445

# 31ம் நாள் நினைவஞ்சலி

## சின்னப்பு தங்கராசா

(இரும்பு நிலையம் முகாமையாளர்)
(வ. கி. (வ. ப.) ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி)



மலர்வு
07-10-1939

உதிர்வு
26-04-1985

அன்புடனும் பண்புடனும் எம்மோடு பழகியின்பமாயிருந்து திடீரென்று எம்மை விட்டு பிரிந்த எம் குலவிளக்கே! நீங்கள் எமைவிட்டு சென்றாலும் உம் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது என்நாளும் நிலைத்து நிற்கும் தங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைபிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, மகன்,
குடும்பத்தினர்.

(3439)

# ஈழநாடு வாரமலர்

EELANADU VARA MALAR


★ நாளை நினைவுதினம்

# மனித இனத்துக்கே சொந்தமாகிவிட்ட ஜவஹர்லால் நேரு

பி. சி. கணேசன்

"பண்டித ஜவஹர்லால் நேரு நம்முடைய முடிசூடா மன்னர். நமக்காக உழைக்கிறார்! ஊழியம் புரிகிறார்- மன்னராக அல்ல, முதல் சேவகராக! இந்தியாவுக்குச் சேவை புரிவதின் மூலம் உலகத்துக்குச் சேவை செய்ய வேண்டுமென்பது அவருடைய ஆசை. அவர் ஒரு சர்வதேசியபுருஷர்" என்று நேருவை அறிமுகப்படுத்தினார் மகாத்மகாந்தி.

1889ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் பாரதபூமியின் அலகபாத் நகரத்தில் நேரு பிறந்தார். சுதந்திர இந்தியாவின் முதற் பிரதமராக 17 ஆண்டு காலம் ஒப்பற்ற சேவைசெய்தார். பாரதத்தின் குரலை நியாயத்தின் குரலாக ஆக்கிய பெருமை நேருவைச் சாரும். 1964ம் ஆண்டு பிரதமராகவே புதுடில்லியில் மே மாதம் 27ம்தேதி மறைந்தார்

இளமையிலே இங்கிலாந்து சென்று ஹாரோவிலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் பயின்று சிட்னிவெப், பீட்ரிஸ்வெப் போன்ற பெரியோர்களின் சிந்தனைகளில் மூழ்கித் திளைத்து பிரிட்டிஷ் பாராளுமன்ற ஜனநாயகத்தால்கவரப்பட்டு அரசியல் வாழ்க்கையின் நுழை வாயிலில் அடியெடுத்து வைத்தார்.

வரலாற்றுக் கண்ணோட்டம் என்பது நேருவிடம் இயற்கையாகவே அமைந்த சுபாவமாகும். இந்திய தேசியம், இந்தியப் பண்பாடுஎன்றமண்ணிலே உறுதியாக வேர் பிடித்தால் தான் உலகப்பொதுமை என்ற நிலைக்கு நாடு உயரமுடியும் எனக்கண்டார். எனவே இந்திய விடுதலைப்போரில் தம்மை முழுமூச்சோடு ஈடுபடுத்திக் கொண்டார்.

பாரதத்தின் பண்டைய பெருமைகளுக்குச் சொந்தக்காரர்களான மக்கள்ஒருவேளை உணவுக்கும் வழியின்றி வாடிடும் துயரம்அவர் இதயத்தைத் தொட்டது. தர்மம் வீட்டிலே தான் ஆரம்பமாகவேண்டும் என்பதைப்போல், சர்வதேசிய உணர்வும் தேசிய உணர்வின் அடிப்படையில்தான் பிறக்க முடியுமென்ற அசையாத நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது!

## புதிய சகாப்தம்

"என்னுடைய வாரிசு நேரு. எனக்குப்பின் என்னுடைய பாஷையை அவர்தான் பேசுவார். அவருடைய கரங்களில் இந்த நாடு பத்திரமாக இருக்கும்" என்ற நம்பிக்கையை இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒருபுதியசகாப்தத்தை தொடக்கி வைத்த காந்திஜி மக்களுக்கு அளித்தார்.

துணிவும் தொலைநோக்கும், ஆர்வப்போக்கும் அறிவாழமும் நேருவிடம் கூடப்பிறந்தவை. பழமையைப் பாராட்டிக் கிடப்பதிலேயே அவர் நேரத்தை வீணாக்கி விடுவதில்லை, எதிர்காலத்தின்சவாலை ஏற்றுச் சமாளிப்பதில் மிகுந்த சுறுசுறுப்புக் காட்டினார்.

"ஜனநாயகம் என்பது வெறும் அரசியல் திட்டமல்ல: அது ஒரு வாழ்க்கை மனோபாவம்" என்ற நேருவின்வாசகம், ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. அதனால்தான் மாற்றம் வேண்டுமென்றுஅவர் பேசிய பொழுதெல்லாம் தொடர்ச்சி பிசகாத மாற்றம் பற்றியும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

## பெரும்பான்மைக் கொடுமை

"ஜனநாயகத்தை நான் மிகவும் நேசிக்கிறேன்; போற்று

(8-ம்பக்கம் பார்க்க)

# சட்டமும் சமூகநீதியும்

இயற்கையின் நடைமுறை நேர்மையே வடிவெடுத்தது. அதை எதிர்த்தால் துன்பம் வருகிறது. அதை அனுசரித்தால் இன்பம் வருகிறது.

நாட்டின் சட்டத்தில் பேணப்பட வேண்டிய நீதி தெய்வநீதியே; இதனை நாம் சைவநீதியென்றும் சொல்கின்றோம்; சமூகநீதிக்கும் சைவநீதிக்கும் எவ்விதமுரண்பாடும் இருக்கமுடியாது.

சட்டம் நீதியை உற்பத்திசெய்யாவிட்டால் அதற்கு தண்டனை விதிக்க தெய்வம் தன்னைக்காத்திருக்கவேண்டுமென்று இக்காலத்தில் எதிர்பார்த்திருப்பதில்லை

மகேஸ்வரன் தம்முடைய ஆதிக்கத்தை மக்களிடம் ஒப்படைத்துவிட்டால், மக்களே தண்டனை வழங்கும் அதிகாரம் பெற்றவர்கள்.

"சட்டம் சமூகநீதியை நிலைநாட்டத்தவறினால், அது மக்களால் தூக்கியெறியப்படும்" என்று இலங்கைக்கு விருந்தினராக வந்திருக்கும் இந்திய பிரதமநீதியரசராக நியமனம் பெற்றிருக்கும் திரு. பி. என். பகவதி குறிப்பிட்டிருக்கிறார்

தூக்கியெறியப்பட்டதை கண்ணுரைக்கண்ட இப்பேரறிஞர் 'தூக்கியெறியப்படும்' என்றது வருங்காலமல்ல; எல்லாக்காலத்தையும் குறிப்பிடும் இயற்கையின் நியதி

நீதிமன்றங்களை நாம் கோடு என்று சொல்வதும், கோடா கேடா என்று கேலி செய்வதும் எதனைக் குறிக்கிறது? அங்கு பேசப்படுவது சட்டம், நீதி அலைப்படுவது அபூர்வம்.

காடையர்கள் பெருகிவரும் சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட வேண்டுமானால் அக்கீழ்மக்கள் கரும்பைப் போல் பிழிந்து கடையப்படவேண்டும். அதற்குரிய சட்டமும், அச்சட்டத்தை நெறிப்படுத்தும் நீதியும் நீதிமானும் நீதியின் மூலவேர்கள்.

# ஆந்திராவில் 'சிறிசு'களை பகடைக்காய்களாக்கும் 'பால்ய' திருமணங்கள் !

பால்ய திருமணம் இன்று இந்தியாவின் பல பகுதிகளிலும் வழக்கொழிந்து வருகின்றது.

பண்டைய சமூக அமைப்பு இதனைப் பெருமளவில் வரவேற்றிருந்தது. அப்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பால்யத் திருமணம் பரவலாக இடம் பெற்று வந்தது. மகாத்மா காந்தி கூட ஒரு பால்ய மணமகனாயிருந்தவர் தான்!

ஆனால் நவீன சமூக அமைப்பில் இத் திருமண முறை அருகிப்போயுள்ளது. இருந்தபோதிலும் ஆந்திரப் பிரதேசத்தின் 'கோதாவரி' நதிக்கழிமுகப்பகுதியிலுள்ள 'பகநதி ரெட்டி' என்ற சமூகம் பால்யத் திருமணத்தில் தொடர்ந்து நம்பிக்கை வைத்தே வருகின்றது. இச் சமூகம் சுமார் 25 ஆயிரம் மக்களைக் கொண்டது.

பால்யத் திருமணத்தை இன்று இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், இவர்கள் பழமை வாதிகளோ அல்லது ஒரு வித ஆதிக்குடிகளோ அல்லர்.

இச் சமூகத்தைச் சேர்ந்த பலர் நவீன நாகரிகங்களை அறிந்தவர்கள். விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருப்பவர்கள்.

அதி நவீன பாணியிலான குளிர் சாதனப் பெட்டிகள், வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் என்பவற்றுடன் மோட்டார் வாகனங்களையும் உபயோகப் படுத்துவர்களாக உள்ளனர்.

ஆயினும் இவர்கள் தமது சமூக அமைப்பில் ஆழ வேரூன்றி விட்ட பால்ய திருமணத்தை இன்றும் நடைமுறைப் படுத்தியே வருகின்றனர்.

இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சியின் போது இத் திருமணங்கள் சட்டவிரோதமானவையாக்கப்பட்டன. இன்றும் கூட இந்தியாவில் இத் திருமணம் சட்ட விரோதமானதாகவேயுள்ளது.

இருந்தபோதிலும் ஆந்திராவின் இந்த ரெட்டி சமூகம் பால்ய திருமணத்தை மிகவும் எளிமையாக இரகசியமாகச் செய்து வருகின்றது.

## மணமக்கள் நிலை

இத்திருமணத்தில் மணமக்களின் நிலைமையே ஒருபுறம் சிரிப்புக்கிடமாகவும், மறுபுறம் பரிதாபத்துக்குரியாதகவுமிருக்கிறது.

மணமகன் சுமார் ஒன்பது அல்லது பத்துவயது நிரம்பியவனாக இருப்பார். ஆனால் மணமகளோ சிலவேளைகளில் இரு வயதைக் கூடப் பூரணமாகப் பூர்த்தி செய்யாதவளாகக் காணப்படுவாள்.

'ரக்ஷாஸ விவாஹலு' (Rakshasa Vivahalu) என்று தெலுங்குமொழியில் இத்திருமணம் அழைக்கப்படுகின்றது.

மணத்தம்பதிகள் மாமன்' மைத்துனன், மைத்துனி போன்ற மிக நெருங்கிய குடும்ப உறவுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

"பல இலட்சம்ரூபா பணம், மற்றும் தங்க நகைகள், நிலபுலன்கள் என்பன பிறர் கைகளுக்கு மாறாது ஒரு குறிப்பிட்ட குடும்ப வட்டத்தில் இருக்கும் வகையிலேயே இத்திருமணங்கள் செய்துவைக்கப்படுகின்றன" என்று இச்சமூகத்தின் முதியவர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

சிறு பராயத்திலேயே திருமணங்கள் நடத்தப்பட்டுவிடுகின்றபோதிலும், வாலிபப்பருவத்தையடையும் வரை மணமக்கள் பிரிந்தே இருப்பர், இதற்கு அவர்கள் மிகச்சிறியவர்களாக இருப்பதே காரணம் என்று கூறப்படுகிறது.

## 'சாக்லேட்' கொடுக்கும் கணவர்

விஜயபாஸ்கர் என்ற பத்து வயதுக்கணவர் அயல் வீட்டிலுள்ள தமது மனைவி பற்றி இப்படிக்கூறுகிறார்: "நான் ராஜேஸ்வரியைத் தினமும் காண்பேன். அவளின் தாய் அவசரவேலையாக இருந்தால் நான் அவளுடனிருந்து விளையாடுவேன்; வெளியே தூக்கிச் செல்வேன். அழ ஆரம்பித்து விட்டால் 'சாக்லேட்' ஒன்றை வாங்கிக் கொடுப்பேன்', என்றார்.

இத்தகைய பால்யத்திருமணங்களினால் இந்த ரெட்டி சமூகத்தில் பலத்த சமூகக்கட்டுப்பாடுகள் நிலவுகின்றன. பெண் பிள்ளைகள் கன்னிப்பருவத்தையடைந்ததும் பாடசாலைகளிலிருந்து நிறுத்தப் பட்டுவிடுகிறார்கள்.

## கடிதம் எழுதியதன் விளைவு

ஒரு தடவை பாடசாலையொன்றில் 18 வயது மாணவனொருவன் இளம் மாணவி ஒருத்திக்கு காதல் கடிதமொன்றை எழுதனான். இக் கடிதம் கண்டுபிடிக்கப்பட்டதும் அம்மாணவன் பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டதுடன் அச்சமூகத்திலிருந்தே ஒதுக்கி வைக்கப்பட்டான்.

இத்தனைக்கும் அவன் காதல் கடிதமெழுதிய இளம்மாணவி, இன்னொருவரின் மனைவி என்பதே காரணமாகும்.

(8-ம் பக்கம் பார்க்க)

அன்பு, பணி, நேர்மை, தாழ்மை, நன்றி, நம்பிக்கை உடையவராக இருங்கள். இறைவனையே நம்புங்கள். உங்களை எவராலுமே வெல்ல முடியாது.

– விவேகானந்தர்

# ஆலயங்களில் வலம்வருதல் எப்படி?

ஆலயங்களில் இறைவனை வலம் வந்து வணங்குவதில் ஏற்படக் கூடிய பலாபலன்களைப் போல், வேறு எதனாலும் ஏற்படுவதில்லை.

கண்கூடான கைமேல் பலன் இதற்குத்தான் உண்டு.

யார் யாருக்கு எத்தனை முறை வலம் வரவேண்டும் என்பதனை ஒரு ஸ்லோகம் கூறுகிறது.

அதையே இப்போது உங்களுக்கு விளக்குகிறேன்.

ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு ஒரு வலமும்,
சூரியதேவனுக்கு
இரண்டு முறை வலமும்,
பரமேஸ்வரனுக்கு — மூன்று முறை வலமும்,
ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு—நான்கு முறை வலமும்,
அரசமரத்திற்கு—ஏழுமுறை வலமும் வரவேண்டும்.

இதற்குக் குறைவாக — எப்போதும் செய்தல் கூடாது.

ஆனால் — அதிகப்படியாகச் செய்யலாம். அதனால் பாதகமில்லை

'பிரதக்ஷணம் என்கிற — வலம் வருதலுக்கு நான்கு அங்கங்கள் இருக்கின்றன.

வலம் வரும்போது—எடுத்து வைக்கும் காலை பூமியில் வைக்

(7-ம் பக்கம் பார்க்க)

## எமது சிறுகதை

## பிரேத வாகனம்



இப்பொழுது எமது பாராளுமன்ற உறுப்பினர் தந்தை செல்வநாயகம் அவர்கள், அமரர் தட்சணாமூர்த்தியின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றுவார்''. என்று சபையின் தலைவர் செல்லப்பா மாஸ்ரர் அறிவித்தார். செல்வா மெல்ல எழுந்தார். செல்லப்பா மாஸ்ரர் கை கொடுத்து மெல்ல படம் இருக்கும் பக்கம் கூட்டிச் சென்றார். திரைச்சீலையை மெதுவாக இழுத்து, தவில்மேதை தட்சணாமூர்த்தியின் படத்தை உற்றுப்பார்க்கிறார் செல்வா. அப்படியே ஒருநிமிடம் படத்தையே பார்த்துவிட்டு, தள்ளாடியபடியே 'மைக்'குக்கு முன்னால் வந்து நின்றார்.

எல்லோருக்கும் வணக்கங் கூறிப் பெரியவர் தனது பேச்சைத் தொடங்கினார்.

''அளவெட்டி மகாஜன சபை, மறைந்துவிட்ட தவில் மேதை தட்சணாமூர்த்தி அவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து கூட்டம் நடத்துவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன் அளவெட்டிக் கிராமம் தெட்சணாமூர்த்தி போன்று இன்னும் பல கலைஞர்களைப் பல்வேறு துறைகளிற் பெற்றிருப்பதை நான் அறிவேன். அப்படியான கலைஞர்களைப் பாராட்டவும் அவர்களை வாழவைக்கவும் வேண்டும்''.

---

**இச் சிறுகதையின் ஆசிரியரான 'இறைகுமாரன்' 26-5-82ல் அகாலமரணமானார். இன்று அவர் நினைவு தினமாதலால், அவர் இறப்பதற்குச் சில தினங்களின் முன் அவர் எழுதிய சிறுகதையை இங்கு வெளியிடுகின்றோம்.**

---

''நான் இப்போ திறந்து வைத்த அமரரின் படத்தை வரைந்த கலைஞர் கிருபாமூர்த்தியை நான் அறிவேன். மிகவும் சிறந்த ஒருஓவியர். அவர் உங்கள் கிராமத்தவர் என்பதில் நீங்கள் பெருமைப்படவேண்டும்''.

இவ்வாறு தந்தை செல்வா தனக்கே உரித்தான மெல்லிய குரலில் கூறியபோது, நான்சற்றுத் திரும்பிச் சுவர்ப்பக்கமாகச் சாய்ந்து நின்று கொண்டிருந்த கிருபா மூர்த்தியை பார்த்தேன். நான் மட்டுமல்ல கூட்டத்திலிருந்த அனைவரும் அவனை ஒருதரம் திரும்பிப் பார்த்தனர். அவனோ ஏதும் சலனங்களின்றி தந்தையையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான்.

எனது காதுகள் தொடர்ந்து பேச்சைக்கேட்பதற்கு மறுத்தன. நேற்றுத்தான் எனது பால்ய நண்பனான கிருபாமூர்த்தியுடன் தந்தை செல்வாவின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். சென்றிருந்தோம் என்பதைவிட 'கிருபாவை நான் பெரியவரிடம் இழுத்துச் சென்றேன்' என்பதுதான் சரி. ஏனெனில் கலைமகள் நடனமாடும் அந்த ஓவியனின் கைகளில் லட்சுமி தன் கிருபையைகாட்ட வழக்கம்போல் மறுத்துவிட்டாள். ஆறுபிள்ளைகளுக்கு - அரை வயிறுகளுக்கு, தந்தையான அவன், வாடிய தன்மனைவியோடு எப்படிச் சோறுபோட முடியும்!

தொழில் இன்றி- போதிய உழைப்பின்றி இந்த உயிர் உள்ள கலைஞன் படும்துன்பத்தைக் கூறவே தந்தையிடம் கூட்டிச்சென்றேன்.

கிருபா கொண்டுவந்திருந்த தனது சித்திரங்களைப் பெரியவருக்குக் காட்டியபோது அவர் அவற்றைப்பார்த்து ஆனந்தப்பட்டது தெரிந்தது. விரைவில் கிருபாவைத் தனது சுதந்திரன் அச்சகத்திற்கு 'கார்டூனிஸ்ட்'ஆக எடுப்பதாகக் கூறினார். எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் கிருபாவின் முகத்தில் எந்தவித மகிழ்ச்சி கோட்டையும் நான் காண முடியவில்லை. அவனின் வறுமைக்கோடிட்ட வாடிய முகம் என்றும் அப்படியே இருந்தது.

அவன் சித்திரங்கீறும் சிறந்த ஓவியனாக இருந்தாலும் அவன் வாழ்க்கை சுவர் இல்லாத சித்திரமாகத் தொடர்ந்து இருக்காது என அவனிடம் கூறினேன்.

●

இப்பொழுது தலைவர் செல்லப்பா பேசிக்கொண்டிருக்கிறார்.

''கலைஞர்கள் எங்கே இருந்தாலும் எங்கே பிறந்தாலும் போற்றப்படவேண்டியவர்கள். சேற்றிலே மலர்ந்த செந்தாமரை போன்ற பல கலைஞர்கள் எந்தச்சமூகத்தில் பிறந்தாலும் காப்பாற்றப்படவேண்டியவர்கள். மனித ஆற்றலைப் பேணி வளர்ப்பதில் சமூகவேறுபாடின்றி நாம் உழைப்போம் என எமது பாராளுமன்ற உறுப்பினருக்குக் கூறிவைக்க விரும்புகிறேன்''.

**★ இறைகுமாரன்**

இவ்வாறு பழமையிலும் சாதிச் சம்பிரதாயங்களிலும் ஊறியிருக்கும் சபைத் தலைவர் கூறியபோது, கூட்டத்தில் பலர் கைதட்டி வரவேற்றனர். என்னால் அவர் பேச்சை முற்றாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவரது பேச்சிலேயே 'சேற்றில் மலர்ந்த செந்தாமரை' பற்றிக் குறிப்பிட்டுக் கூறியது, அவரின் உள்மனத்தையே காட்டுவதாக இருந்தது.

திடீரெனக் கூட்டத்தில் ஏதோ சலசலப்பு. யாரோ மயங்கி விழுந்து விட்டார்களாம். நானும் ஓடிச்சென்று கூட்டத்தை விலக்கிக்கொண்டு பார்த்தேன். 'கிருபா மூர்த்தி மயங்கி விழுந்து விட்டான்' என்று காதில் கேட்டது,

நானும் வேறு சிலரும் கிருபாவுக்கு முதலுதவி அளித்தோம். பலன் இல்லை. கூட்டத்தை ஐந்து நிமிடம் ஒத்திவைப்பதாகத் தலைவர் அறிவித்தார். நானும் கூட்டத்திலிருந்த இளைஞருமாக அவனை தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு காரில் இட்டுச் சென்றோம்.

கிருபாமூர்த்தியின் குடிசை அல்லோல கல்லோலப்பட்டது. குசேலரின் குழந்தைகளையொத்த அவனின் பிள்ளைகள் அவனது பிரேதத்தைச் சுற்றியிருந்து கதறினர் மனைவி அழுதழுது அடைத்த குரலில் அவனது கால்மாட்டில் இருந்து முனகிக்கொண்டிருந்தாள்.

அவனது உடலைச்சுமந்து கொண்டு வந்த காருக்கு அக்கம்பக்கத்தில் ஒருவாறு பணம் சேர்த்துக் கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு மீண்டும் முற்றத்திற்கு வருகிறேன்.

''கொஞ்ச நாளாய் ஒரு நேரம் தான் அவன் சாப்பிட்டானாம். அதாலைதான் ஆசுப்பத்திரிக்குப் போகவேண்டி வந்தது. அங்கேயும் பத்து நாளாய்க்கிடந்து பிறகும் இழுபறிபடாமல்போய்ச்சேர்ந்திட்டான்'' யாரோ உறவினர் உரையாடிக் கொண்டார்கள்.

செத்தவீடு ஊர்ப் பொறுப்புத்தான் அதைவிட அவனது சமூகத்தின் பொறுப்பு. வறுமையின் நிறம் என்ன என்பதை அந்தக் குடிசையில் அன்று மிக நன்றாக உணர முடிந்தது.

நான் செல்லப்பா ஆசிரியரின் வீட்டுக்குச் சென்றேன். அவரைச் சந்தித்து ''சவ வண்டிக் அறைத் திறப்பைத் தாருங்கள் கிருபாவின்செத்த வீடு தெரியும்தானே''

இது நான்

''என்ன தம்பி! புதுமாதிரி!! வண்டி கிருபாவின் செத்த வீட்டுக்குத் தரமுடியாது என்பது உனக்குத்தெரியாதோ?''

நான் வியப்போடு அவரை நிமிர்ந்து நோக்குகிறேன்.

'உமக்குத் தெரியாத பிரச்சினையா இது...எங்கட சமூகத்திற்கென்று அதாவது சைவ வேளாளர்களுக்கென்று உம்மடை தகப்பனும் சேர்ந்துதானே செய்தது. பணம் தந்த அங்கத்தவர்களுக்கு மட்டும் தான் வண்டில் தரமுடியும்.''

''கிருபாவின் சமூகத்தவர்கள் பணம் தரமறுத்தார்களா?''

''இதென்ன தம்பி! நாங்கள் எங்கடை ஆட்களுக்கென்று எங்கடை ஆட்களிட்டைப்பணம் சேர்த்துச் செய்தது.''

'நீங்கள் எத்தனையோ பொது நிறுவனங்களில் அங்கத்தவராய் இருக்கிறீர்கள். அவற்றின் ஊடாக ஒரு பொது வண்டிலாக இதைச் செய்யாமல் சாதிக்கு ஒரு வண்டிலாக ஏன் அப்போ செய்தீர்கள்? பள்ளிக்கூடங்களில்சம ஆசனம் கோயில்கள் திறந்து விட்டாச்சு; பஸ்களில் சம பிரயாணம்; ஆனால்பிரேதம் போகும் போதுதான் தனியான சாதியா? மண்ணோடு, கடலோடு ஒன்றாகக் கலக்கும் பிரேதத்திற்கா சாதி?''

படார் என்று வீட்டுக்கதவைச் சாத்தி மூடினார். செல்லப்பா மாஸ்ரர் உள்ளே சென்றுவிட்டார். முகத்தில் அடிவாங்காத குறையாக நான் அவரின் வீட்டு முற்றத்தில் செய்வது அறியாது நின்று கொண்டிருந்தேன்.

உள்ளே மாஸ்ரரின் மகளின் குரல்கேட்டது.

''என்னப்பா! வண்டிலைக் கொடுத்தாலென்ன? அந்த வண்டிலுக்கே அலங்காரம் செய்து பெயின்ற் அடித்தது கிருபாதான் என்று நீங்கள் அடிக்கடி கூறுவீர்களே''

''ஏ! நீ பேசாதே! அது வேறு விஷயம்' மாஸ்ரரின் கூக்குரல் வெளியே கேட்டது.

அந்த ஏழைக்கலைஞனின் சவ அடக்கத்திற்கு எங்களால் இயன்றதைச் செய்ய நான் அந்த முற்றத்தை விட்டு விரைந்தேன்.

(யாவும் கற்பனை)

---

## இவ்வாரம் உங்கள் பலன்

**இன்று**

மாதம்; வைகாசி
திகதி- 13 (1985-5-26)
வாரம்- ஞாயிறு
திதி- ஸப்தமி பின்னிரவு வரை
நக்ஷத்திரம்- ஆயிலியம் பிற்பகல் வரை

**மேடம்**

எதிர்பாராத வரவுண்டு. இனசனப்பகையுடன் இல்லத்திலும் சச்சரவு தோன்றும். பெரியவர் ஒருவரின் ஆதரவு உண்டு.

**இடபம்**

உறவினராயினும் நம்பிநடவாதீர்கள். வீண் வார்த்தைகளால் விபரீதங்கள் விளையும். அந்நியர் ஒருவரால் ஆபத்து உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கும் சிலர் முனைவர்.

**மிதுனம்**

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள். சகோதரர் மூலம் சஞ்சலம் தோன்றும். எதிர்பார்த்த வேதனம் தடைப்படும். நிதானம் வேண்டும்.

**கடகம்**

இயந்திரங்களுடன் பழகுபவர்கள் எச்சரிக்கை வேண்டும். அன்னைவழிச் சுகக்குறைவுக்கும் இடமுண்டு. அன்பர்களாலும் ஆதரவுண்டு.

**சிங்கம்**

அதிக நம்பிக்கை வைப்பதால் ஆபத்துக்கள் உருவாகும். மனதிலும் விரக்தி தோன்றும், வித்தையில் சோர்வு தென்படும். புத்திரர் ஒருவரின் விடயம் குறித்து வேதனைப்பட நேரும். அமைதி வேண்டும்.

**கன்னி**

பிறர் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும். திடீர்த் தாக்குதலுக்கும் இடமுண்டு கூட இருந்தே குழிதோண்டப் பார்ப்பர். விழிப்புடன் இருக்கவும்.

**துலாம்**

உறவினர் வருகைக்கு இடமுண்டு இல்லத்தில் இனிமை தவழும் தொழில் விடயத்தில் சோர்வும் எதிர்பாராத வரவும் உண்டு.

**விருச்சிகம்**

தாய்வழித் தனவரவும் தானிய விருத்தியுமுண்டு. தார சுகத்திற்கும் இடமுண்டு. வாகனச்சாரதிகள் நிதானம் வேண்டும்.

**தனுசு**

உயர்வுக்கு இடமுண்டு பெரியோர்களின் ஆசியும் கிடைக்கும். புத்திரவழிச் சுகக்குறைவும் குடும்பத்தில் குதூகல குறைவுமுண்டு. தெய்வ அருளும் உண்டு.

**மகரம்**

முதலாளிகளாயின் தொழிலாளிகளுடன் பகைத்துக் கொள்ளவேண்டாம். காதலர் வாழ்வில் களங்கத்திற்கு இடமுண்டு. கல்வியில்ஈடுபடுவோர் கூடிய கவனமெடுக்கவும்.

**கும்பம்**

இலாபகரமான காரியங்களில் தடைகள்தோன்றலாம். களஸ்திரவழியால் சஞ்சலம் தோன்றும். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இருக்கும்.

**மீனம்**

உத்தியோகத்தில் உளவு வேலைகள் அதிகரிக்கும். உடன் பிறந்தோர்களால் உபத்திரவம் தோன்றும். சரீரசுகம் குன்றும், நிதானசிந்தையுடன் செயல்படவும்.

திருமலை
**க.வே.ரவீந்திரன்**

---

## ஒரு கடை திறந்திருக்கிறது!

எங்கள் நகரம் இடைக்கிடை
ஜனநடமாட்டம் அற்று
மயான அமைதியில்
மூழ்கிக் கிடக்கும்
பட்டப் பகலிலும்
கும்மிருட்டு நிலையில்
வீதிக்கடைகளெலாம்
விழி இறுக்கி, வெறிச்சோடி
விறைத்திருக்கும்!
மோப்பம் பிடித்தலையும்
தெருநாய்களும் வேலையற்று
எங்கோ ஒரு தாழ்வில்
விழுந்து சுருண்டிருக்கும்.
ஆனால் ......
அந்தச் சவப்பெட்டிக்
கடைகாரன் மாத்திரம்
நம்பிக்கையுடன்
கடை திறந்திருக்கிறான்!

— குமார் தனபால்

# மதுசாரத்திற்குப் பதிலாக ஆரோக்கியம் தரும் பானங்களை அருந்தினாலென்ன?

அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஆறு பணியிருக்கும். ''சமரசம் உலாவும் இடமே'' என்ற பிரபல்யமான பாடல் என் செவிகளில் விழுகிறது. சமரசம் உலாவும் 'அந்த' இடத்தைப் பார்ப்போமே என்ற எண்ணம் தோன்ற, உள்ளே செல்கிறேன்.

ரிக்கற் எடுப்பதற்கும், பிளாக்களையும் போத்தல்களையும் வைத்துக் கொண்டு 'கள்' பெறுவதற்குமாக ஏராளமான 'குடிமக்கள்' நெரிசல்பட்டு நிற்கின்றனர்.

தேரில் சுவாமி இருக்கும்போது அர்ச்சனை செய்ய ரிக்கற் எடுப்பதற்காகப் பக்தர்கள் முண்டியடித்துக்கொண்டு நிற்பதாக இதனைக் கற்பனை செய்கிறேன்.

அந்தக் கள்ளு விற்பனை நிலையமான 'கோப்பறேசனில்' ஆங்காங்கே தத்தம் நண்பர்களுடனும், தனியாகவும் பிழாக்களில் கள்ளை நிரப்பி, மணல் குவித்து பிழாச்சரியாதிருக்கும்படியாக அதில் வைத்துப் பேசிக் கதைத்து, பாடிக் கொண்டிருக்கின்றனர் பெருங் குடிமக்கள்.

உள்ளே வருகிறார்கள் இரு நபர்கள். ஒருவர் மற்றவருக்குத் தோளில் இடித்துச் சொல்கிறார்... ''டேய்! கொப்பர் இருக்கிறாரடா'' என்று.

தகப்பனைக்கண்ட மைந்தன் 'மச்சான் நீ எடுத்துக் கொண்டு வாடா. நான் அங்காலை நிற்கிறன்' என்றபடி நழுவிச் செல்கிறார்.

சிலநிமிட நேரங்களாக வசனங்கள் நடந்து கொண்டிருந்த கூட்டத்திலிருந்து மீண்டும் 'சமரசம் உலாவும் இடமே...' பாடல் தொடர்கிறது.

தந்தை, மகன், அண்ணன், தம்பி என்ற பேதமில்லாது உயர்வு, தாழ்வு எனும் பாகுபாடு இல்லாது எல்லோரும் சங்கமிக்குமிடம் 'கோப்பறேசன்' என்றால் யாரும் மறுக்க முடியாது.

நமது ஆண்களில் குடிகாரர்கள் எத்தனை வீதம்?

பெரும்பாலும் ஆசிய நாடுகள் தவிர மேற்குநாடுகளில் ஆண், பெண் இருபாலாரும் மதுபானம் அருந்துகிறார்கள்.

மதுபானப் பழக்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? மனிதன் தோன்றிய நாளில் இருந்தே என்று கூறிவிடலாம்.

அன்று இன்றுள்ளதுபோன்ற பலரக மதுபானவகைகள் இல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் தேனை மதுவாக ஆதியில் அருந்தி வந்துள்ளனர்.

இராமாயணத்தில் இலங்கையின் வெற்றிக்குப்பின் வானரப்படை புளித்ததேனைக் குடித்து போதை கொண்டு வெற்றிக் களிப்பெய்தின என அறிகிறோம்.

நரம்புகளை முறுக்கேற்றி— உண்மையில் பலவீனப்படுத்தி- சிறிது நேரத்துக்கு மனிதனைச் சுயஅறிவிலிருந்து தடுத்து வைத்திருக்கும் போதைத்தன்மையை மதுபான வகைகள் கொண்டுள்ளன.

பாம்பின் விஷத்திலிருந்து தயாரிக்கும் மதுபானத்தைச் சீனர் பாவிக்கின்றனர். 'வோட்கா' என்ற பானம் சோவியத் நாட்டில் பிரபல்யமானது.

இரசாயன சேர்க்கை மது வகைகளும் ஏராளம் உண்டு.

ஆயினும் 'கள்' தென்னை, பனை, கித்துல் முதலான இராசு பயிர்களில் இருந்து பெறப்படும் இயற்கையான பானமாகும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பிரபல்யமான பானமும் 'கள்'ளுத்தான்.

தென்னை, பனை, கித்துல் பாளைகளில் இருந்து இப்பானம் வடியும்போது சுத்தமான 'சீனிக்கரைச்சலாகவே' இருக்கும். இக்கரைச்சல்களில் மாற்றுபபடுவதினால் இவை புளிபபேறி 'அல்ககோல்' அதாவது மதுசாரம் ஆகின்றன.

இந்த மதுசாரத்தில் முக்கியமானதும் வெறிஉண்டாக்குவதும் 'எதேனல்' அல்லது 'எதைல் அல்ககோல்' ஆகும். கள்ளில் விற்றமின் பி உண்டு.

ஆனால் 'கசிப்பு' என்கிற சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் போதைப் பொருளில் உயிர் பாதிப்புத்தரும் 'மெதனோல் அல்ககோல்' உண்டு.

# சில மனிதர்களுடன் சில நேரங்கள்

மதுவகை எதுவானாலும் மனிதனை அவை பலவகைகளிலும் பாதிக்கின்றன. குடி குடியைக் கெடுக்கும்.

இயற்கையான 'கள்' சித்த வைத்தியத்தில் மருந்தாகவும் உண்டு. ஆயினும் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' எனறிருக்க 'கள்' எம்மாத்திரம்?

நமது நாட்டிலே கள் இறக்குவது முக்கிய தொழில்களில் ஒன்று. இதனால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் சீவிக்கின்றன. அரசாங்கமே இதற்கெனச் சபைகளை அமைத்துள்ளது.

கள் இறக்கும் தொழிலை நாற்பது வருடங்களாகச் செய்துவரும் நல்லூர் அரசடி வீதியைச் சேர்ந்த திரு. வி. வி. துரையப்பா அவர்களைச்சென்று சந்தித்தேன். தற்போது அவருக்கு அறுபது வயது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். மிகவும் திடகாத்திரமாக இருக்கிறார்.

ஐ. சண்முகலிங்கம்

பிற்பகல் நேரம் நான் சென்றபோது 'தீட்டுத் தடியை' ஏற்ற இறக்கமாக வைத்து அதன்மேல் இதற்கெனத் தெரிவுசெய்து வைத்துள்ள பணைத்தூள் 'பாளைக் கத்தியை' தீட்டிக் கொண்டிருக்கிறார். இக்கத்தியைத் தீட்டுவதே ஒருவித கலைதான் என்கிறார் பெருமையுடன். 'பிளேட்' போல அது கூர்மையாக இருக்கிறது.

பாளையைச் சீவுவதற்குக் கூர்மையான கத்தி வேண்டும். அல்லது பாளையில் தேவையற்ற காயங்கள் ஏற்பட்டுவிடும் என்கிறார்.

நீங்கள் குடிப்பதில்லை எனக் கேள்விப்பட்டேன் என்றேன்.

''நம்பமாட்டீர்கள். இந்த வயதுவரை ஒருவித மதுபானமும நான் அருந்தியது கிடையாது'' என்றார்.

ஏன் விருப்பமில்லையா என்றதற்கு இந்தத் தொழிலுக்கு மதுபானம் மருந்துக்குக்கூட ஆகாது என அடித்துச் சொல்கிறார். எனது கேள்விகளுக்கு திரு. துரையப்பா பதில்சொல்கிறார்.

''ஒரு மரம், தென்னையானாலும்சரி பனையானாலும் சரி பாளையைப் பதப்படுத்தி ஒரு மாதம் அல்லது மூன்று வாரங்களின் பின்னரே, கள் எடுப்பதற்கு 'முட்டி' கட்டலாம். மரத்தில் ஏறத்தெரிந்தால் மட்டும் கள்பெற முடியாது. தொழிலைப் பழக வேண்டும்.

''எனது சிறியதகப்பனாரிடம் இத்தொழிலைக் கற்றேன். மரத்தில் ஏறிய அன்றே இத்தொழில் நுணுக்கங்களை நான் புரிந்து கொணடேன்.

பாளையை பனை நாரினால் வரிந்து கட்டி நாளுக்குநாள் மெதுவாகவும் முறைப்படியும் தட்டுப்பொல்லினால் தட்டித் தட்டிப் பதப்படுத்தி நிதானமாகச் சீவி அறுப்பது இத்தொழிலில் முக்கிய அம்சம்.

இத்தொழிலில் பலவித செய்முறைகள் உண்டு.

கள்ளினிணைக் கூடுதலாகப் பெறுவதற்கு ஆசைப்படுபவர்கள் அவசரப்பட்டு மரத்தையே பழுதடையச் செய்து விடுவதுமுண்டு.

இன்று ஒரு மரத்தில் காலை, மாலை என இருநேரம் கள் இறக்குகிறோம். ஆனால் நாளொன்றுக்கு மூன்றுமுறை கள் இறக்கக்கூடிய செய்முறைகளும் இருக்கின்றன.

முன்னைய காலங்களில் நாளுக்கு ஐந்து முட்டிகளை ஒரு மரத்தில் கட்டியதும் உண்டு. ஆனால் இன்று ஒன்று அல்லது இரண்டு முட்டிகளையே கட்டுகிறோம்.

மனிதரைப் பாருங்கள். என்னுடைய மாமனார் இருக்கிறாரே, அவருக்கு வயது எண்பத்தைந்து. இப்பவும் வேலை செய்கிறார். காரணம் அந்தக் காலத்து சாப்பாட்டுவிதம் சாமை, குரக்கன் போன்ற சத்துள்ள சாப்பாடுகள் இப்போ யார் சாப்பிடுகிறார்கள்?

'இப்படித்தான்மரங்களும்'

''நாற்பதுவருடங்களாக இத் தொழிலைச் செய்கின்றீர்கள்; குடும்ப சீவியத்துக்கு இதன் வருவாய் போதுமா'' என்றதற்கு 'ஒருபோத்தல்கள் அன்று ஐந்து சதம் பத்துச்சதம் இன்று நாலு ரூபா ஐந்து ரூபா ஆனாலும் சீவியம் ஏதோ ஓடிக்கொண்டே இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டு இடுப்பில் 'ஆயலைக் கூட்டினை' பெல்ட்டினால் பூட்டித் தனது பேரக்குழந்தைகளைப் பகடியாக வெருட்டிக்கொண்டு மாலை நேரச்சீவலுக்கு வாலிபர் போல் புறப்பட்டுவிட்டார் துரையப்பா.

கள் இறக்கும் தொழிலில் தனிப்பட்ட முதலாளிகளுக்கு லாபம்தந்த 'மரவரி நீக்கப்பட்டபின் இன்று 'தனியார் தவறணை கூட்டுறவுச் சங்கம்' என்பனவே நாட்டில் உள்ளன.

யாழ். மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் இரண்டும் கூட்டுறவு முறையிலும் ஏனைய தமிழ் மாவட்டங்கள் தனியார் தவறணை முறையிலும் நடைபெறுகின்றன

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க முறையை உருவாக்கியதில் பெரும் பங்கு கொண்டவர் சட்டத்தரணி காலஞ்சென்ற திரு. அ. விசுவநாதன் அவர்களாகும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சங்க சமாஜத்தில் பதினெட்டுச் சங்கங்கள் இணைந்துள்ளன. ஒவ்வொரு சங்கமும் பல தவறணைகளை நடாத்துகின்றன.

ஒன்பது தவறணைகளைக் கொண்ட அரியாலைச் சங்கத்தில் 200க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், ஊழியர்கள் உள்ளனர்.

சீவல்தொழிலாளியான திரு. த. சிவலிங்கம் இச்சங்கத்தின் தலைவராவார். இவரைச் சந்தித்தபோது-

''1972 மே மாதம் கள் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. காலங்காலமாகச் சீவல் தொழிலைச்செய்துவந்த ஏழைச் சமூகமக்கள் மரவரி காலத்தில் முதலாளிகளால் முன்னேற வாய்ப்புக்கிட்டவில்லை. கூட்டுறவுச் சங்கமுறை வந்தபின்பு அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் காணப்படுகிறது. இம்முறையை உருவாக்க முன்னின்று உழைத்த பெரியவர்களை தொழிலாளர்களாகிய நாம் என்றும் மறக்கமாட்டோம்'' என்றார்.

ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த திரு க. சிவராசா என்பவர் கருத்து தெரிவிக்கையில்:

இருபது மரங்கள்தான் ஒரு தொழிலாளிக்கு கள் இறக்குவதற்கு அனுமதிக்கிறார்கள் என்றும், திறமையுள்ள தொழிலாளி கூடுதல் மரங்கள்பெற முடியுமென்றும் தொழில் செய்யும்போது ஏற்படும் விபத்து நிதி பதினையாயிரம்ரூபா வரை கிடைக்கிறது என்றும்தொழில் செய்யமுடியாத காலத்தில் சேமலாபநிதி கிடைப்பதாகவும் நன்மை, தீமையான காலங்களில் குறைந்தவீத வட்டிக்கடன் தரப்படுவதாகவும், லாபத்திலும் பங்கு உண்டு என்றும் கூட்டுறவுமுறை வந்தபின்பு எமது வாலிபர்கள் வேறு வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

கள் இறக்கும் தொழிலோடு சம்பந்தப்பட்டவர்களைவிட, 'கள்' இறக்கும் தொழிலுக்கு ஊக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிற ஒருவரைச் சந்தித்தால்தான் திருப்தி ஏற்படும் இல்லையா?

வயது ஐம்பத்தைந்து உள்ள 'மணியம் என்றபெரியவரைச் சந்தித்தேன். சந்திப்பின்போது அவர் குடித்திருக்கவில்லை.

கட்டிடத் தொழிலாளியான இவர் கூறுகிறார்:

''இன்றும் கைத்தடியில்லாமல் நடமாடித் திரியும் தகப்பனார், தான் குடிக்கும் நேரங்களில் சிரட்டையில் சிறிதளவு கள்ளுத்தந்து 'குடியடா' என்பார் அன்பாக. ஆயினும் நான் திருமணம் செய்த 25ம் வயதிலேதான் குடிக்க 'லைசன்ஸ்' எடுத்தேன்

''பகல்பூராவும் வெய்யிலில் நின்று கஷ்டப்பட்டு வேலை செய்தபின் 'கள்' குடிப்பதனால் தேக அலுப்புகள் மறந்து சாப்பிடலாம், நித்திரை நன்றாகக் கொள்ளமுடிகிறது காலையில் எழும்பும்போது சுகமாக இருக்கிறது. இதனை குடிக்காதவர்கள் ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம்.

''என்னை கள்ளுக்குடிக்குமளவிற்கு நான் குடிப்பதில்லை. அளவாகவே பாவிப்பேன். கோப்பறேசன்களில் சுத்தமும் ஊழியர்களிடம் உபசரிக்கும் பண்பும் பேணப்படவேண்டும். கோப்பறேசன்தானே என்று ஏனோதானோ என கள்ளும் இருக்கக்கூடாது! ஊழியர்களுமிருக்கக்கூடாது.''

●

எங்கிருந்தோ காற்றோடு கலந்துவந்து என் செவிப்பறையினூடாக நெஞ்சத்தைத் தொட்டு நிலைத்த சில கேள்விகளையும் இங்கு தருகின்றேன்.

★ போதைதரும் கள்ளினால் எத்தனை குடும்பங்கள் குலைந்துள்ளன?

★ குடிகாரன் வீட்டில்ஏன்நித்தியம் தரித்திரம் தாண்டவமாடுகிறது?

★ நாளொன்றுக்கு ஐம்பது ரூபா சம்பளம் பெறும் ஒரு தொழிலாளி அதில் அரைவாசிக்கு மேல் அல்லது முழுவதையுநம குடிக்கச் செலவழித்தல் நியாயமாகுமா?

★ மதுவை மாந்தும் ஒருவன் தன் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக, மனைவியினதும் பெற்றோரினதும் உவகைக்காகக் கையில்என்னத்தை வீட்டுக்குள் கொண்டுபோகின்றான்.?

★ குடிகாரனின் பிள்ளைகளின் உடைகள் திருப்தியாயிருக்கின்றனவா? புத்தகம் கொப்பிகள் குறைச்சல் இல்லையா?

குடிகாரன் வீட்டில் தினம் தினம் அழுகுரலும் அவலக் குரலும் கேட்கின்றனவே, ஏன்?

மதுசாரத்திற்குப் பதிலாக ஆரோக்கியம் தரும் பயனுள்ள பானங்களை அருந்தினால் என்ன?

# பெண்கள் கவனத்திற்கு

- இரவில் படுக்கும்போது முன்புறக் கொய்யகத்தை இரண்டு மடிப்பாவது எடுத்துவிட்டுத்தான் படுக்க வேண்டும்
- முந்தானையைத் தொங்கவிட்டு நடக்கக்கூடாது. முந்தானை ஆடினால் குடும்பமும் ஆடிப்போகும் என்பர்.
- கோவலில் சாமி கும்பிடும்போது பின்னங்கால் இரண்டையும் பின்னிக்கொண்டு முன்நெற்றி தரையில் படுமாறு கும்பிடவேண்டும்.
- தீர்த்தம் வாங்கும் போது இடக்கைக்கும் வலக்கைக்கும் நடுவில் முந்தானை நுனியை வைத்துக்கொண்டு தீர்த்தம் வாங்கவேண்டும்.
- சுமங்கலிப் பெண்கள் வெறும் தலையுடன் தலைமுழுகக் கூடாது. குளிக்குமுன் சிறிது மஞ்சளை உரைத்துப் பூசிக்கொண்டுதான குளிக்கவேண்டும்.
- குத்துவிளக்கு ஏற்றும்போது ஒரு திரி மட்டும்போடக் கூடாது. இரண்டு திரிபோட்டு ஒரு முகமாக ஏற்ற வேண்டும்.
- காலையில் வாசலுக்குச் சாணம் தெளிக்கும் போது பழைய சாணமாக இருந்தாலும் பரவாயில்லை. தண்ணீர் புதிதாக எடுத்துத் தெளிக்கவேண்டும்.

—அனுஷியா அக்கா

## னைவில் நிறைந்த அரசியலார்சிலர்—13

# சிங்களம் மட்டும் கோஷம் ஏற்படுத்திய வாய்ப்பு!

பொதுத்தேர்தலில் ஒரு கட்சியின் சார்பிலோ சுயேட்சையாகவோ வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் போது அவரது ஆதரவாளர்களுள் முக்கியஸ்தர் சிலர் முன்னுக்கு நிற்பார்கள். அவர்கள் ''ஊர் அறிந்த பிரமுகர்கள்'' அவர்கள் சொல் இல்லாமல் வேட்பாளர் எதையும் செய்யமுடியாத ஒரு நிலையை அவர்களே ஏற்படுத்திக்கொள்வார்கள்.

இந்த முக்கிய ஆதரவாளர்களான உள்ளூர்ப் பிரமுகர்கள் தேர்தல் பிரசாரத்தின் போதே தமது வேட்பாளர் தேர்தலில் தோல்வியடைந்தால் தேர்தல் வழக்குப்போட்டு வெற்றி பெற்றவரை நீதிமன்றத்தின் மூலம் தோற்கடிப்பதற்கான தடயங்களையும் சேகரித்து வைத்துக் கொள்வார்கள். தேர்தல் வழக்குப் போடும் போது (அதாவது தேர்தல் முடிந்த ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வெற்றிபெற்றவருக்கு எதிராக நீதிமன்றத்தில் தேர்தல் ஆட்சேப மனு தாக்கல் செய்ய வேண்டும்) இந்த முக்கிய ஆதரவாளர் அல்லது அத்தொகுதியிலுள்ள வாக்காளர் ஒருவரின் பெயரிலோ அல்லது வாக்காளர் சிலரின் பெயரிலோ தேர்தல் ஆட்சேப மனுதாக்கல் செய்யப்படும் தேர்தல் ஆட்சேப மனு வழக்கில் தோல்வியேற்பட்டாலும் செலவு தொகையுடன் மனு தாக்கல் செய்யப்பட்டால் அந்தச் செலவு தொகை அதிகம் வராத முறையில் சமாளிப்பதற்காக வாக்காளர் பெயரில் மனுதாக்கல் செய்யப்படுவது வழக்கம்.

### செல்வா தொடர்ந்த

### தேர்தல் வழக்கு

1952-ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்துக்கு நடந்த பொதுத்தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் திரு. சு. நடேசபிள்ளையை எதிர்த்து இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் சார்பில் முதல் தடவையாகப்போட்டியிட்ட அதன் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தோல்வியடைந்துவிட்டார்.

திரு. செல்வநாயகம் இத்தோல்வியைக் கண்டு துவண்டு போகாவிட்டாலும் அவரது ஆதரவாளர்கள் அவரை விடவில்லை. இத்தேர்தல் முடிவை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யவேண்டும் என்றும் வழக்கில் வெற்றி பெறுவதற்குப் போதிய சான்றுகள் இருப்பதாகவும் அவர்கள் வற்புறுத்தினர். தங்கள் பெயரிலேயே தேர்தல் ஆட்சேப மனுவைத் தாக்கல் செய்யலாமென்றும் அவர்கள் வலியுறுத்தினர்

சிறந்த சிவில் அப்புக்காத்தான திரு. செல்வநாயகம் தேர்தல் ஆட்சேப மனு தாக்கல் செய்யவிரும்பவில்லை. ஆனாலும் தமக்காகக் கடுமையாக உழைத்த தமது ஆதரவாளர்களின் கோரிக்கையையும் உதறித் தள்ள விரும்பவில்லை.

ஆனால் யாருடைய பெயரிலும் தேர்தல் ஆட்சேபமனுவைத் தாக்கல் செய்யாமல் தமது பெயரிலேயே வழக்கைத்தாக்கல் செய்தார்.

தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணை நடைபெற்றது. சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன.

முடிவில் செலவுதொகையுடன் மனுதள்ளுபடி செய்யப்பட்டது!

தீர்ப்பு வழங்கப்பட்டதும் அதை ஏற்றுக்கொண்ட திரு. செல்வநாயகம் செலவு தொகைக்கான காசோலையை நீதிமன்றத்தில் வைத்தே எழுதிக்கொடுத்துவிட்டு வெறியேறினர்.

### ஜி. ஜி. பதவி

### துறப்பு ஒரு வாய்ப்பு

இலங்கை தமிழ் அரசுக்கட்சியையும் அதன கொள்கையையும் கட்டி வளர்க்கும் பணியிலீடுபட்ட திரு. செல்வநாயகமும் தமிழ் அரசுக்கட்சியினரும் வடக்கிலும் கிழக்கிலும் கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரத்திலீடுபட்டனர்.

1953-ஆம் ஆண்டில் நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டது. வேலை நிறுத்தங்களும் பரவின. 1953-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் உணவு நெருக்கடியை எதிர்த்து எதிர்க்கட்சியினர் பெரும் ஹர்த்தாலை ஒழுங்கு செய்தனர்: இந்த ஹர்த்தாலில் வன்செயல்கள் தலை தூக்கின. இவற்றை அடக்குவதற்குக்கொழும்பில் சில இடங்களில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளும் தடியடிப்பிரயோகங்களும் நடைபெற்றதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் செய்ய நேர்ந்தது. சிலர் உயிரிழந்தனர்.

இந்தத்துயர சம்பவங்களைத் தாங்கிக்கொள்ள முடியாத இளைஞரான திரு. டட்லி சேனநாயாகா பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து விட்டு அரசியலிருந்து சிறிது காலம் ஒதுங்கியிருக்க முடிவு செய்தார்.

### எஸ். எம். ஜி.

திரு. டட்லிக்குப்பின் பிரதமராக சேர். ஜோண் கொத்தலாவெல பதவியேற்ருர்.

சேர் ஜோண் பிரதமராகப் பதவியேற்ற சில .வாரங்களில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அமைச்சர் பதவியைத் துறக்க நேர்ந்தது.

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியைப்பொறுத்த வரை வடக்கு மாகாணத்தில் தங்கள் கொள்கையைப் பரப்பிச் செல்வாக்கை நிலைநாட்டுவதற்கு திரு. ஜி. ஜி. யின் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியியே பெரும் தடையாக இருந்தது. திரு. ஜி. ஜி. அமைச்சர் பதவி துறந்தது தமிழ் அரசுக்கட்சி நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. அரசாங்கத்திற்கு கத்திற்கு எதிரான போராட்டங்கள் ஒரு புறமிருக்க வடக்கில் தமிழ்க் காங்கிரசுக்கும் தமிழ் அரசுக்கட்சிக்கும் இடையில் தான் போராட்டம் நிகழ்ந்தது.

உணவு நெருக்கடியும் பொருளாதார நெருக்கடியும் அதிகரித்து வந்ததால் விரைவில் சேர் ஜோணின் அரசும் பதவி விலகும் என்று எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்துஅடுத்த தேர்தலுக்கான தந்திரோபாயங்களில் இறங்கின.

சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழிகளாக்காமல் ஐக்கிய தேசியக் கட்சி அரசு காலங் கடத்துகிறது என்று குற்றம் சாட்டி 1951-ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியிலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் விலகிய திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகா ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தென்னிலங்கையில் தீவிர பிரசாரத்திலீடுபட்டுச் செல்வாக்குப் பெற்று வந்தது

### 24 மணிநேரத்தில்

### சிங்களம் ஆட்சி மொழி

சிங்கள மொழிக்கு உரிய இடம் வழங்கப் படவில்லையென்று திரு பண்டாரநாயகா பிரசாரம் செய்து வந்த சமயத்தில் 1954-ம் ஆண்டில் பிரதமர் சேர். ஜோண் கொத்தலாவலை யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வமாக வருகை தந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட உற்சாகமான வரவேற்புக்களில் மகிழ்ந்து நெகிழ்ந்து போன சேர். ஜோண் கொத்தலாவலை கொக்குவிலில் அளிக்கப்பட்ட வரவேற்பில் அறிஞர் ஹன்டி பேரின்பநாயகம் மொழிப்பிரச்சனையைக் கிண்டிவிட ''சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம உரிமை வழங்கி ஆட்சிமொழிகளாக்கப்படும்'' என்று உறுதி மொழி வழங்கினுர்.

சேர்.ஜோணின் இந்த உறுதி மொழி ஐக்கியதேசியக் கட்சிக்குள்ளும் மற்றும் பல வட்டாரங்களிலும் எதிர்ப்பைக் கிளப்பின. கொழும்புப் பத்திரிகைகள் சந்தர்ப்பம் பார்த்து சேர் ஜோணுக்கு எதிராக மொழிப்பிரச்சனையில் செயலலப்பட்டன.

சுலபமாகப் பதவிக்கு வருவதற்கு மொழி நல்ல சாதனம் என்பதைத் தெரிந்துகொண்டு திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயகா தமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கையை மாற்றினுர். தமது கட்சி ஆட்சிக்கு வருமானுல் இருபத்து நான்கு மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவதாக உறுதியளித்தார். இதை முறியடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சிங்களத்தை மட்டும் ஆட்சியாக்கும் கொள்கையை வகுப்பதற்கான சர்ச்சைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்பதைத் தங்கள் கொள்கையாக நவலங்கா சம சமாஜக் கட்சியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் வகுத்துக் கொண்டன.

இந் நிலையில் சமசமாஜக் கட்சியின் தலைவர் டாக்டர். என்.எம்.பெரேரா அரசாங்க மொழி சம்பந்தமாக நாட்டின் நிலைமையைத் தெளிவாக்கும் பொருட்டு பாராளுமன்றத்தில் ஒரு பிரேரணை கொண்டு வந்தார்.

1955-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19-ஆந்திகதிபாராளுமன்றத்தில் டாக்டர் என். எம். பெரேராவின் இப் பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஸ்றிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான திரு.எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயகா அதற்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்.

நாடு முழுவதிலும் சிங்களத்திற்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கி இருமொழிகளையும் அரச மொழிகளாக்குவதற்கு இலங்கை அரசியலமைப்பில் உடனடியாகத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்பது டாக்டர் என். எம். பெரேராவின் பிரேரணை.

இதற்குத் திரு.பண்டாரநாயகா கொண்டு வந்த திருத்தத்தில் சிங்களமும் தமிழும் என்பதற்குப் பதிலாக சிங்களம் இலங்கையின் அரசகருமமொழியாக என்று குறிப்பிட்டிருந்தார்.

அன்று முழு நாளும் இப் பிரேரணை மீதும் திருத்தப் பிரேரணைமீதும் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றபின் சபை ஒத்திவைக்கப் பட்டது.

பின்னர் 1956-ஆம்-ஆண்டு பெப்ரவரி மாதம்18-ஆந்தேதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதுடன் இப் பிரேரணைகள் செல்லுபடியற்றவையாகி விட்டன.

### சம அந்தஸ்தும்

### சமஷ்டி அமைப்பும்

மொழிப் பிரச்சனை இவ்விதம் சூடு பிடிக்கத் தொடங்கியது. திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமது கொள்கையை மக்கள் மத்தியில் பதிப்பதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

''மண் நாட்டுத் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டபோதே அடுத்து இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்படும் என்று சொன்னது இப்பொழுது மொழி உரிமைபறிக்கப்படுவதிலிருந்து தெளிவாகிறது. இப்போதே தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தின்மூலமும் நிலமும் பறிக்கப்படுகிறது.'' என்று தந்தை செல்வா பிரசாரம் செய்தார்.

தமிழ்க் காங்கிரஸ் மொழிக்குச் சம அந்தஸ்து கேட்டது; தமிழ் அரசுக் கட்சி மொழிக்கு சம அந்தஸ்துடன் தமிழ்ப்பிரதேசத்தையும் காப்பாற்றுவதற்காக சமஷ்டி என்னும் இணைப்பாட்சிமுறையை 'தமிழரசு அமைப்போம்'' என்று பிரசாரம் செய்து கேட்டது!

(மிகுதி அடுத்த வாரம்)

---

## மாணவர் உலகை

# ஆற்றலால் கவர்ந்தவர்



ஆசிரியனுக்கு இன்றியமையாதன நல்லொழுக்கம், கற்பிக்கும் ஆற்றல்மாணவரை வசீகரிக்கும் சிறப்பியல்பு, மாணவர் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளல் முதலியன. இவையனைத்தும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் பேராசிரியர்சோ.செல்வநாயகம் அவர்கள். பிறவிக்கவிஞன், பிறவி எழுத்தாளன், பிறவிப்பாடகன், பிறவி ஓவியன் என்று கூறுவதுபோலப் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களைப் பிறவிப் பேராசிரியர் என்று சிறப்பித்துக்கூறலாம்,

நல்லாசிரியன், நல்லதந்தை, மக்கள் போற்றும் ஊழியன் இவையெல்லாம் பேராசிரியரின் நிலைகள்.

''சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'' என்ருர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பேராசிரியர் அவர்களும் எட்டுத்திக்கின் கலைச்செல்வங்களும் நமது மண்ணில் செழிக்கவேண்டும் என்று அவாவுற்ருர். அதற்காக உழைத்தார்.

நாட்டு மக்களின் வறுமை நீக்கப்படவேண்டும் என்றும், அதற்குரிய திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்றும், அதிற் பல்கலைக்கழகத்திற்குப் பெரும் பங்குஉண்டென்றும் அடிக்கடி செல்வா கூறுவார்.

ப. சிவநாதன்
(விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்)


யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றி நல்லதொரு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்றும் மாணவர்கள் அதற்காக ஓயாது உழைக்கவேண்டும் என்றும் மாணவரை ஊக்குவிப்பார் அவர்.

வறுமையைப் போக்கும் எண்ணம் அவர் மனத்தில் ஆழப்பதிந்திருந்தது. வாடிய பயிரைப் பார்த்து வாடும் உள்ளம் படைத்தவராக அவர் திகழ்ந்தார்.

பேராசிரியருக்கு மரபு வழிக் கல்வியில் பெருமதிப்பும் நம்பிக்கையும் இருந்தது. ஒழுக்கநெறியிலேயே தமிழர் பண்பாடு உள்ளது என்று கூறுவார். இந்து மதவாழ்க்கை நெறிகளும் ஒழுக்கநெறிகளும் நம்மூதாதையர் அருளிய செல்வம் என்று நம்பினுர். அதன்படி வாழ்ந்த பெருமகன் அவர்.

---

துலக்கமான...தெளிவான...
தட்டச்சு
ரேனியோ
வேலைகளுக்கு
''ஷபீரு''
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 22073



**ராஜா** தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-00
கமலஹாசன் - ஜெயபிரதா
மஞ்சுபார்கவி
**சலங்கை ஒலி**
(ஈஸ்ட்மன் கலர்)
1984ம் ஆண்டின்
மிகச்சிறந்த படம்

**வி.லோ** சினிமா
சுதாகர் - ராதிகா
நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(ஈஸ்மன்கலர்புதியகொப்பி)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2.30
பாக்கியராஜ் - சரிதா
நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)
புதிய கொப்பி

**ஹரன்** சினிமா
தினசரி 10-30 — 2-30
850 நாட்களுக்குமேல்
காட்சியளித்த வெற்றிச்
சித்திரம்
மோகன் - பூர்ணிமா
**வி தி**
(கலர்)

**ஆனந்தி**
**வீடியோ சினிமா**
[மனோகராவில்]
தினசரி 10-30, 2-30
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
லட்சுமி நடித்த
**இதயவீணை**
(கலர்)

**லதா மினி**
(கோண்டாவில்)
காலை 10-30 மாலை 3-30
ரஜனிகாந்த் - அம்பிகா
பாக்கியராஜ்
**நான் சிவப்பு மனிதன்**

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
10-30 2-00 4-30
**DRACULA**
ரதுலா
(கண்டிப்பாக வயது
வந்தவர்க்கு மட்டும்)

STANLEY MINI
10-15, 2-00, 4-15
Bruce Lee
நடித்த
**Enter The Drageon**
(Karate Film)

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-30
எம் ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன், - நாகேஷ்
ஆனந்தன்
நடித்த
**தனிப் பிறவி**
(புதிய கொப்பி)

**யாழ். வின்ஸர் மினி**
தினசரி: 10-30, 2-30
ரஜனிகாந்த், ரதி,
நம்பியார் நடித்த
**கழுகு**

**மொடேர்ண்**
**மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமையில்)
10-15, 4-15 காட்சி
மட்டும்
**From Russia with Love**
007 - புகழ் சீன் ஹொனறி
நடித்த பயங்கர சண்டைக்
காட்சிகள் நிறைந்த
துபபறியும் படம்

தினசரி பகல் 1 30
மட்டும்
**மதுரை சூரன்**
காண்பிக்கபபடும்


## ஆலயங்களில்...

(3-பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருக்கும் காலுக்கு உள்ளாக வைத்து மெல்ல, நடந்து செல்ல வேண்டும்.

கைகளை ஆட்டாமலும்—வாக்கினல் ஸ்லோகங்களைச் சொல்லிக் கொண்டு இருதயத்தில் இறைவனைத் தியானித்துக் கொண்டும் வலம் வருதல் வேண்டும்.

இறைவனுக்கும்இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கும் பக்தனுக்கும் நடுவே பிரதக்ஷணம் செய்தல் கூடாது.

அந்தப் பக்தனையும் சேர்த்தே நாமும் வலம் வருதல் வேண்டும்!

பலிபீடத்திற்கு நடுவில் சென்று வலம் வருதல் கூடாதது ஒன்றாகும்.

நன்றி:பாலஜோதிடம்


# I C M A
## NEXT SESSION
பின்வரும் திகதிகளில்
ஆரம்பமாகின்றது

NOVEMBER—DECEMBER 1985

| | | |
|---|---|---|
| I C M A - Section A | [Week Ends] | 01-06-85 |
| Section B | [Week Ends] | 01-06-85 |
| Professional Part I | [Week Ends] | 01-06-85 |
| Chartered Preliminary | [Week Ends] | 01-06-85 |
| I A A - Part I | [Week Ends] | 01-06-85 |
| I A B - Foundation | [Week Ends] | 01-06-85 |
| I A B - Intermediate | [Week Ends] | 15-06-85 |
| I A B - Final | [Week Ends] | 15-06-85 |
| I D P M - Part I | [Week Ends] | 01-06-85 |

NOTE; Very special Ratefor repeats.

## CANTABIA INSTITUTE,
21, MAIN STREET, JAFFNA.
T' PHONE: 24201


## 31ம் நாள் நினைவஞ்சலி
## அழைப்பு

திரு. சவரிமுத்து இக்னேசியஸ் துரைசிங்கம்
(சட்டத்தரணி)



மலர்வு:
17–4–1909

உதிர்வு:
27–4–1985

"சீவியத்திலும் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 27-5-85 திங்கட்கிழமை காலை 8·00 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இ பலியில் அனைவரையும் பங்கு பற்றி இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

மக்கள், மருமக்கள்.
நெடியகாடு, வல்வெட்டித்துறை. 3440

## மரண அறிவித்தல்

வண்ணார்பண்ணை சீனியர் ஒழுங்கை கலட்டியைச் சேர்ந்த வலலிபுரம் சபாரத்தினம் ஐயாத்துரை காலமானார் அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களாகிய குமாரசுவாமி (காகிள்ஸ் லிமிட்டட்), சிவக்கொழுந்து, தாமோதரம்பிள்ளை (தபால் அதிபர்) ஆகியோரின் சகோதரருமாவார் ஈமச்சடங்குகள் (24·5-85) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது உற்றார் உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். 3441


## உயர்ந்த வருமானம் பெற 'ஷப்ரு' வுடன் சேமியுங்கள்

உங்கள்முதலீடுகளுக்கு
உயர்ந்த வட்டி **30%**



# SHABRA

"சிறு துளி பெருவெள்ளம்"
உழைக்கும் போதே சேமிப்பதற்கு
**"ஷப்ரு" வழிகாட்டுகிறது**

மாதாந்தம் நீங்கள் சேமிக்கும் சிறுதொகை குறுகிய காலத்தில் பெருநிதியாக உங்களுக்கு கிடைக்கிறது

### உழைக்கும்போதே சேமிக்கும் திட்டம்

| மாதாந்தம் நீங்கள் சேமிக்கும் தொகை | 36 மாதமுடிவில் உங்களுக்குக்கிடைப்பது |
|---|---|
| ரூபா 100/= | ரூபா 4,727/60 |
| ,, 200/= | ,, 9,455/20 |
| ,, 300/= | ,, 14,182/80 |
| ,, 400/= | ,, 18,910/40 |
| ,, 500/= | ,, 23,638/00 |
| ,, 600/= | ,, 28,365/60 |
| ,, 700/= | ,, 33,093/20 |
| ,, 800/= | ,, 37,820/80 |
| ,, 900/= | ,, 42,548/40 |
| ,, 1000/= | ,, 47,276/00 |

உங்கள் சேமிப்புக்கு உயர்ந்த தொடர்வட்டி வழங்கப்படுகிறது

### நிறுவனத்தின் நிதிநிலைமை

| நிதியாண்டு | 1981/1982 | 1982/1983 | 1983/1984 |
|---|---|---|---|
| முதலீடு | ரூ. 178,700/= | ரூ. 500,000/- | ரூ. 1000,000/- |
| ஒதுக்கீடு | ——— | 31,510/- | 321,810/- |
| வைப்பு முதல் | 1280,760/- | 4236,969/- | 123,98,671/- |
| கடன் பெறு முதல் | ——— | ——— | ——— |
| [illegible] | 191,019/- | 574,960/- | 24,77,997/- |
| வைப்பாளர்களுக்கு வழங்கிய வட்டி | 142,977/47 | 492,217/12 | 21,82,765/- |
| தேறிய லாபம் | 48,041/74 | 82,743/53 | 261,926/- |

31-03-85இல் மொத்த வைப்பு 300 இலட்சத்திற்கு மேல்

இயக்குநர்கள்:- எஸ். பாலசுப்பிரமணியம் (F.I.B Lond) கே. சண்முகம், [illegible]

நிதித்துறையில் நாணயம் மிக்கநண்பன்

**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்**

| | |
|---|---|
| 207, மின்சாரநிலையவீதி, | 61, நியூபுல்லர்ஸ்வீதி, |
| யாழ்ப்பாணம். | கொழும்பு - 4. |
| தொலைபேசி: 22073 | தொலைபேசி: 589310 |

# "அரசு பீதியடையாமல் தமிழருக்கு சுயாட்சி வழங்க வேண்டும்"

## 'வைத்தி' பிறந்ததின விழாவில் 'தர்மர்'

[ஏ வி மாணிக்கம்]

"உலக வரலாற்றில் பிரதேச சுயாட்சி பெற்ற இனங்கள் எதுவும் தனிநாடு கோரி பிரிந்திருக்கவில்லை. ஸ்பெயின் நாட்டில் வாழும் 'பாஸி' இனமக்கள், சுயாட்சி பெற்ற பின்னர் அந்த நாட்டு அரசிடமிருந்து தனிநாடாக பிரிந்து வாழ விரும்பாமல் தொடர்ந்தும் பிரதேச சுயாட்சி தான் உகந்தது என்று வாழ்ந்து வருகிறார்கள். இந்த நாட்டு அரசும், பீதியடையாமல் பிரதேச சுயாட்சியோ—சமஷ்டியோ தமிழின மக்களுக்கு வழங்கினால், அவர்கள் திருப்தியுடன் வாழ முடியும் அரசு இதைக் கொடுக்க மறுக்கும் பட்சத்தில் தமிழின மக்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளப் படுவார்கள்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிப்பிரமுகரும் மானிப்பாய் தொகுதி முன்னாள் எம் பி யுமான திரு.வி தர்மலிங்கம் 'தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்' பற்றிப் பேசுகையில் வலியுறுத்திச் சொன்னார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், அக்கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும், பிரபல தொழிற்சங்க வாதியுமான திரு அ வைத்திலிங்கத்திற்கு 70 வது பிறந்ததின விழா நேற்று அமைதியாக ஆடம்பரமற்ற முறையில் கொண்டாடப் பட்டது.

யாழ் நகரிலுள்ள ஹோட்டல் ஞானம்ஸில் இவ் விழா நடைபெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளர் திரு. பொன் குமாரசுவாமி இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

தொழிற்சங்கங்கள், சமூக சேவா சங்கங்கள், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்கள், அறிஞர்கள்-கல்விமான்கள் இவ் விழாவில் வந்துகொண்டனர், பிறந்ததினவிழாக் கொண்டாடும் இந்நன்னாளில் "தமிழ் மக்களை எதிர்நோக்கும்பிரச்னைகள்' என்பது குறித்துக் கருத்துப் பரிமாறல் இடம்பெறுவது பொருத்தமாக இருக்குமென்று தலைவர் திரு. குமாரசாமி பேச்சாளர்களுக்கு முன்னுரை வழங்கினார்.

மேற்குறிப்பிட்ட தலைப்பில் திரு வி, தர்மலிங்கம் உரையாற்றினார். அவர்தொடர்ந்து பேசுகையில், "இந்த நாட்டில் இரு தேசிய இனங்கள் (சிங்களவர்-தமிழர்)வாழ்வதை இந்தஅரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த அடிப்படையில் இலங்கை ஒரு சிறந்த நாடாகவும், இரு இனங்களும் உரிமைபெற்ற தேசிய இனங்களாகவும் வாழவேண்டுமானால் பிரதேசசுயாட்சி அல்லது சமஷ்டி ஆட்சி வழங்கப்படவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

'இந்த வகையான ஆட்சி அமைப்பை தமிழினமக்களுக்கு வழங்குவதில் இந்தஅரசு அச்சமடைகிறது. பிரதேசசுயாட்சி அல்லது சமஷ்டி ஆட்சி வழங்கி விட்டால், இவர்கள் தனிநாடாகப்பிரிந்து விடுவார்கள் என்பதே அரசு அச்சமடையக்காரணமாகும்.

மற்றும் பேரசிரியர் க. சிவத்தம்பி, ஈழநாடு நிர்வாக ஆசிரியர் திரு என். சபாரத்தினம் ஆகியோரும் பாராட்டுரை நிகழ்த்தினர்.

திரு. வைத்திலிங்கம் தமக்களிக்கப்பட்ட விழாவுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், உழைக்கும் பாட்டாளி வர்க்கமான சிங்களமக்களும் தமிழ்மக்களும் ஐக்கியமாகச் செயற்படுவதன் மூலம் தான் இந்தநாட்டுப்பிரச்னைகள் தீர்க்கப்படும் என்றும் இது விஷயத்தில் என்றும் அசையாத நம்பிக்கைவைத்து தாம் செயல்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

வடபிரதேச தொழிற் சங்கச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் நன்றிதெரிவித்துப் பேசினார்.

## மனித குலத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிறேன்; அதேசமயம் பெரும்பான்மை மக்கள் செய்கின்ற முடிவுகள் எப்பொழுதுமே சரியான முடிவுகள் என்பதைஎன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே மக்களின் தளராத விழிப்புணர்ச்சியே ஜனநாயக வெற்றிக்கு அடிப்படையாக அமைவது" என்று நினைவுறுத்திவந்தார்.

நாட்டு மக்களை நிரந்தர பொருளாதார சுபீட்சத்தை நோக்கி அழைத்துச் சென்ற அரசியல் தொலைநோக்காளர் நேரு என்பது இன்று அவருடைய பேரனின் ஆட்சியில் நிரூபிக்கப்படடுள்ளது.

### சோஷலிசம்

ஜனநாயகஅமைப்பில்பொருளாதார புனர்வாழ்வை சீக்கிரமாகக் கொண்டுவர, உலகவரலாற்றிலே யாருமே இதுவரை, செய்யத்துணியாத திட்டமிட்ட பொருளாதார அடிப்படையில் ஜனநாயகமுறை கெடாமல் ஒரு சோஷலிசசமுதாயத்தை நிர்மாணிக்கும்பணியில் முன்னேறினார்

அரசியல்களத்தை சூதாட்ட நிலையிலிருந்து மீட்டு, போராட்ட நிலையிலிருந்து படிப்படியாக மாற்றி, மனிதாபிமான நல்லுறவு நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தியுள்ள உலகத்தலைவர்களில நேருவுக்கு சிறப்பான இடமுண்டு.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கையும், சோஷலிச சித்தாந்தத்தில் பற்றும், தனிமனிதனின் சுதந்திரத்தைப் பேணுவதில்அக்கறையும் கொண்ட நேரு மிகப் பெரிய ஜனநாயகவாதிகள் எனப்போற்றப்படும் ஜெபர்சன், ஆபிரகாம் லிங்கன் போன்றோரின் வரிசையில் வைத்துஎண்ணத்தக்கவர்; ஒரு மாறுபாடு அவர்கள் சோஷலிச சித்தாந்திகள் அல்ல. எனவே அவர்களைவிட நேருஉயரமாகக் காட்சியளிக்கிறார்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்றபுருஷன் ஜனநாயக சோஷலிசவாதியான நேரு அவருடைய சோஷலிசகோட்பாடுகள் இன்று இந்தியாவாலும் மனிதகுலத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்துள்ள அனைவராலும் பரிசீலிக்கப் படத்தக்கவை.

## ஆந்திராவில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பால்யத் திருமணத்தை தடைசெய்யப்படவேண்டுமென இச்சமூகத்தைச் சேர்ந்த சிலர் வலியுறுத்தி வருகின்றனர். "குடும்பங்களின் சொத்துப்பரிமாற்றங்களுக்காக ஒருவித கூட்டம் போன்றதே இத்திருமணங்கள். இதில் விபரமறியாத சிறுகுழந்தைகள் பகடக்காய்களாக நிறுத்தப்படுகிறார்கள்" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இச்சமூகத்தின் ஆசிரியர் ஒருவர் கூறுகிறார்: "இத்திருமணங்கள் அர்த்தமற்றவை. இவை பற்றி ஏதாவது எதிர்ப்புத் தெரிவித்தால் நான் எனது சமூகத்தினால் ஒதுக்கப்பட்டு விடுவேன் எனக்கு அரிசி பால் கூடத்தரமறுத்துவிடுவார்கள்."

இத்திருமணங்களினால் சிறுவர், சிறுமியர் சுதந்திரமற்றவர்களாக உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள். அத்துடன் குழந்தைப்பருவம் முதல் பல்வேறுபட்ட சமூகக் கட்டுப்பாடுகளுக்குள்ளாகிறார்கள்.

எனவே ஒரு சமூகவிரோதச் செயல்போன்ற இந்திருமணங்களை ஆந்திராவின் தெலுங்கு தேசம்' அரசாங்கம் தடைசெய்யவேண்டுமென்பதே இந்தியாவில் சமூக சீர்திருத்தங்களை விரும்புவோரின் பெரு விருப்பமாகவுள்ளது.

பா. அனந்தகிருஷ்ணன்

நன்றி: 'INDIA TODAY'

## காங்கேசனில் சீனியும் மாவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் 3000 தொன்மாவும், 1000 தொன் சீனியும் இருகப்பல்களிலிருந்து இறக்கப்பட்டன.

மாவு, சீனி இறக்குமதி செய்யப் பட்டதால் யாழ். மாவட்டத்தில் இவற்றுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(மா)

## 4 விடுதலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நான்கு இயக்கங்களும் ஒன்றிணைந்தற்கான காரணங்களை விளக்குவதும் வேறு பல அம்சங்களும் இக்கூட்டத்தில் இடம்பெறும்.

இந்த இயக்கங்களின் பல முக்கிய பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்

இதேவேளை 'லண்டன் ஈழ மககள் செய்தித் தொடர்பு நிலையம்' மேற்படி நான்கு விடுதலைஇயக்கங்களும் இணைந்ததற்கான காரணங்களை விளக்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. ஐந்து காரணங்களுக்காக இணைந்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வே. பிரபாகரன், சிறிசபாரத்தினம், பத்மநாபா, பாலக்குமார் ஆகிய நான்குஇயக்கத் தலைவர்களின் கையெழுத்துக்களுடன் இந்த அறிக்கைவெளியிடப்பட்டுள்ளது.

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள தமிழர்களுக்கு இத் திடீர்ச் சோதனை அச்சத்தையும், ஆச்சரியத்தையும் கொடுத்தபோதிலும் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லையெனக் கூறப்பட்டது. வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே இச் சோதனை இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது,

வீட்டிலுள்ளோர் விபரம், மற்றும் புதிதாக வந்திருப்போர் விபரம் ஆகியன சேகரிக்கப்பட்டன. பல சந்தேகத்துக்கிடமானவர்கள் விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். சோதனை நடத்தியோர் மிகவும் நிதானமாக நடந்துகொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(கி)

# ஜனாதிபதி ஜே.ஆர்.விரைவில் இந்தியா செல்வார்

[புதுடில்லி]

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கைப் பிரச்னை குறித்து பேச்சுக்கள் நடத்த இருவாரங்களுக்குள் இந்தியாவுக்கு செல்வார் என்று இலங்கைச் செய்திகளை ஆதாரம் காட்டி இந்தியச்செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி சோவியத் யூனியனிலிருந்து திரும்பியதும் இலங்கை ஜனாதிபதியின்இந்திய விஜயம் அமையும் என்றும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன.

## டிக்ஸிட் இன்று பதவியேற்பார்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகர் திரு. டிக்ஸிட் இன்றுஞாயிற்றுக்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்பார்.

இதனைத் தொடர்ந்து இன்றைய தினமே அவர்அமைச்சர் தொண்டமான், அமைச்சர் லலித் அத்துலத் முதலி, டாக்டர் நீலன் திருச்செல்வம் ஆகியோரை அவர் சந்திப்பார்

[கி]

## பிரிட்டன் வரும்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பிலிருந்து பிரிட்டனுக்கு நேரடி விமானச் சேவைகளை ரத்துச் செய்யும்படி பிரிட்டிஷ் அரசாங்கம் சகல மேற்கத்திய விமானச் சேவைகளையும் கேட்டிருந்தது. இருந்த போதிலும்: கொழும்பிலிருந்து அம்ஸ்டராம் போன்ற ஏனைய ஐரோப்பிய நகரங்களுக்குச் சென்று அங்கிருந்தும் இலங்கைத் தமிழர்கள் பிரிட்டன் வர ஆரம்பித்துள்ளனர்,

பிரிட்டினில் குடியல்வு - குடிவரப்பகுதி அதிகாரிகளிடம் இங்குவருவதற்காகத் தெரிவிக்கப்படும் காரணங்களில் இலங்கையில் தாம் பலத்த நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்நோக்குவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் பிரிட்டனில் வெளி விவகார அமைச்சு இலங்கைத் தமிழர்கள் வருகையைப் பெருமளவில் கட்டுப்படுத்த முன்வந்துள்ளது. தொடர்ந்து இங்கு வருவோர் மீண்டும் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று அந்த அமைச்சு அறிவித்துள்ளது

பிரிட்டன் வந்துள்ள இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினர் விரைவில் தாயகம் திருப்பி அனுப்பி வைக்கப்படுவதற்கு ஆயத்தமாக வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் நகரில் சுவரொட்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் ஓட்டுமடச் சந்தியில் ஏப்ரல் 25ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மரணமான இராஜகாந்தன் (சுசன், ரவி,) ச சரசகோபால் [அன்ரன்] ஆகியோருக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' [ஈ. பி. ஆர் எல். எவ்]யின் மக்கள் விடுதலைப் படை இராணுவப்பிரிவுஅஞ்சலி செலுத்தி யாழ் குடா நாடெங்கும் நேற்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

[மா]

## தனியார் பஸ்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை குறிப்பிட்ட பஸ் உரிமையாளரிடமிருந்து எது வித தகவலும் பெறமுடியவில்லை.

(மா)

## தமிழீழ விடுதலை அணி கண்டனம்

[சென்னை]

செட்டிகுளம் பகுதியில் வாழும் தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் விடுத்த உத்தரவை தமிழீழ விடுதலை அணி கண்டித்துள்ளது.

இந்த வெளியேற்ற நடவடிக்கை மனிதஉரிமைகளை மீறும் ஒரு செயல் என்று அந்த அணி தமது அறிக்கையில் கண்டித்துள்ளது.

## நெடுந்தீவில் பொருட்களுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு- குறிகட்டுவான் படகுச்சேவை துண்டிக்கப்பட்டுள்ளதால் நெடுந்தீவில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள், எரிபொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சேவை தொடர்ந்தும் நடைபெறாத பட்சத்தில் அடுத்த சிலவாரங்களில் நெடுந்தீவுப்பகுதிமக்கள் மிகவும் மோசமான ஒரு நிலையை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என அஞ்சப்படுகிறது.

கடந்த 15ம் திகதி இடம்பெற்ற படகுப்பிரயாணிகள் படுகொலைச் சம்பவத்துக்குப் பின்னர் போக்குவரத்துச் சேவை நடைபெறாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

(மா)

## பன்குளம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்காரசிறுமி, அயல்வீட்டுக்காரரான சண்முகலிங்கம் ஆகிய எட்டுப்பேரும் பரிதாபகரமான முறையில் கொல்லப்பட்டனர்.

இக்குடும்பத்தலைவர் கே. தாமோதரம் மாத்திரம் தப்பித்துக் கொண்டார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதிகளில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது மக்கள் தமது வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### திருமதி நல்லமுத்து சின்னத்தம்பி

நயினாதீவைச் சேர்ந்த திருமதி நல்லமுத்து சின்னத்தம்பி காலமானார். இவர் திருமதி வள்ளியம்மை குமாரசுவாமி, வித்துவான் சி. குமாரசாமி, ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் S S. கதிரவேலு, திருமதி இராசம்மா புவனசுந்தரம் ஆகியோரின் அன்புத்தாயார் ஆவர். ஈமக்கிரியைகள் நயினாதீவு சல்லிவரவை மயானத்தில் 26-05-85 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் உறவினரும், நண்பர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

(3664)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P.O. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126